# மலரும் மண உறவு இயக்கம்

**உலக திருமணநாள் 2023**

*ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 2வது ஞாயிறு*

*உலக திருமண தினம்* கொண்டாடப்படுகின்றது.

***உங்கள் புனிதத்தை உலகத்துடன் கொண்டாடுங்கள்***

(குறிப்பு)

1. ஏல்லா தம்பதியர்களையும் ஒன்றாக திருஅவையில் அழைத்து தம்பதியர்களாக அமர வைத்து அவர்களை வரவேற்த்து திருப்பலியில் பங்கு பெற செய்தல் (மெழுகுதிரி ஏந்தி பீடம் நோக்கி பவனியாக வருதல்)
2. சிறப்பு வழிபாடு இன்றைய நாளில் நடத்துவது சிறந்ததாக அமையும்
3. புங்குகளில் திருப்பலி முடிந்த பிறகு அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கி அவர்களை மரியாதை செய்தல் சிறந்தது.

**விளக்கு (அ) மெழுகுதிரி**

மலர்களின் சங்கமம் மாலையாகவும், நதிகளின் சங்கமம் கடலாகவும், மரங்களின் சங்கமம் தோப்பாகவும் மாறுவதுபோல் , கணவன், மனைவி – மழலைகள் - உறவுகள் என்ற அன்பு நெஞ்சங்களின் சங்கமம் புனிதமான குடும்பங்களாகின்றன. அவர்களை இணைத்து வைப்பது அன்பு – பாசம் - நேசம் - தியாகம் என்ற அன்பின் இழைகள். அதுவே இறைவாழ்வோடு சங்கமமாகிறது.

தம்பதியர்கள் எந்நிலையிலும் ஒருவா் மற்றொருவரை புரிந்து, அறிந்து, தெளிந்து கொள்பவர்களாகவும், இறையேசுவின் மதிப்பீடுகளான அன்பு, அமைதி, தியாகம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டு வாழவும், சுமைகளை சுகங்களாக மாற்றவும், சோதனைகளை சாதனைகளாக மாற்றவும் வேண்டிய மனப்பக்குவத்தை பெற்று வாழவும் இந்த விளக்கனை (அ) மெழுகுதிரியை பவனியாக பீடம் நோக்கி ஏந்தி வருவார்கள். இது தங்களையே கரைத்துக்கொண்டு குடும்பத்திற்கு ஒளி கொடுப்பவர்களாக ஒவ்வொரு தம்பதியரும் கிருஸ்துவின் ஒளியில் வாழ்ந்திட இந்த திரியை தியாக திரியாக பவனி ஏந்தி வருகின்றார்கள்.

**திருப்பலி முன்னுரை**

உலக திருமணநாளை இன்று நாம் கொண்டாடுகின்றோம். உலக திருமண தினம் குடும்பத்தின் அடித்தளமாக கணவன் மற்றும் மனைவியை இந்த உலகம் மதிக்கிறது இதுதான் நம் சமூகத்தின் அடிப்படை யாக அமைகின்றது. தினசரி திருமண வாழ்க்கையில் அவர்களின் உண்மைத்தன்மை தியாகம் மற்றும் மகிழ்ச்சியின் இவற்றிற்கு மதிப்பு கொடுப்பதே இந்தநாள்.

திருமண நாள் கொண்டாடும் யோசனை 1981 இல் லூசியானாவில் உள்ள பேடன் ரூஜில் தொடங்கியது, தம்பதிகள் மேயர், கவர்னர் மற்றும் பிஷப் ஆகியோரை புனித காதலர் தினத்தை "நாங்கள் திருமண நாளாக நம்புகிறோம்" என்று பிரகடனப்படுத்த ஊக்கப்படுத்தினர். இந்த நிகழ்வு மிகவும் வெற்றிகரமாக இருந்தது, இந்த யோசனை உலகளாவிய திருமண சந்திப்பின் தேசிய தலைமையால் வழங்கப்பட்டது மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1982 வாக்கில் 43 கவர்னர்கள் இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அறிவித்தனர் மேலும் பல வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களுக்கு கொண்டாட்டங்கள் பரவின. 1983 ஆம் ஆண்டில் பெயர் "உலக திருமண நாள்" என மாற்றப்பட்டது 1993 ஆம் ஆண்டில் புனிதர் போப் இரண்டாம் ஜான் பால் உலக திருமண நாளில் அவரது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதங்களை வழங்கினார்.

திருமணம் என்பது எந்த ரகசியம் உடையது இல்லை ஆனால் இல்லர வாழ்வில் அதிக சவால்கள்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. எப்படியானாலும் சவால்களையும் பிரச்சனைகளையும் கடந்து கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு ஏற்ப தம்பதியர்கள் தங்கள் வாழ்வை இறைவனின் மீது அதிக பற்று வைத்து வழிநடத்துகின்றார்கள். நாம் குடும்பத்தில் காதுகொடுத்து ஒருவர் கூறுவதை ஒருவர் கேட்டால் போதும் அதுமட்டுமல்ல ஒருவருக்கொருவர் பாராட்டுதலின் வழியாக அன்பு உறவை வளப்படுத்திக்கொள்ள முடியும். கடவுள் கூறுகின்றார் நான் தூயவராக இருப்பது போல நீங்களும் தூயவராக இருங்கள், நாம் கடவுளின் ஆலயம் தூய ஆவியார் குடிகொள்ளும் பரிசுத்த இடம் எனவே நாம் ஒருவரையொருவர் மன்னித்து ஏற்றுக்கொண்டு அன்பு செய்து வாழவும் இந்த திருப்பலியில் குடும்பத்தை ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

மன்னிப்பு வழிபாடு:

- அன்பான ஆண்டவரே நாங்கள் தூயவராக வாழ எங்களை அழைத்தீரே! நாங்கள் பெரும்பாலும் எங்கள் தன்னலத்தையே நாடியிருக்கின்றோம் எங்கள் அன்பு வாழ்வு மேகம்போல் நிலையற்றதாக இருந்திருக்கின்றது என்பதை உணர்ந்து மனம் வருந்துகின்றோம். ஆண்டவரே இரக்கமாயிரும்.
- ஆண்டவரே நீரே எங்களுக்கு வழியும் உண்மையுமாய் இருக்கின்றீர்! நாங்கள் தேவையில் உள்ள எங்கள் சகோதர சகோதரிகளுக்கு உதவி செய்திருக்கின்றோம் ஆனால் நாங்கள் ஒருவருக்கொருவர் உதவ மறுத்து காயப்படுத்திய தருனங்களுக்காக மனவருந்துகின்றோம். கிருஸ்துவே இரக்கமாயிரும்.

- ஆண்டவரே அன்பின் இலக்கணமே! நாங்கள் உமது அன்பு பாரசட்சமற்ற அன்பு என்பதை உணராமல் எங்கள் அன்பை மற்ற குடும்பங்களுக்கும் கொடுக்காத தருனங்களுக்காக மனம் வருந்துகின்றோம். ஆண்வரே இரக்கமாயிரும்.

**கனவன் மணைவி இருவரும் சிறப்பாக மன்னிப்பு கேட்டல்:**

**கணவன் மன்னிப்பு**

திருமண வாழ்வில் கடவுள் எனக்கு துணையாக தந்த உன்னை இந்நாள்வரை ஏற்றுக் கொள்ளாமல் புரிந்து கொள்ளாமல் மதித்து அன்பு செய்யாமல் இருந்தமைக்கு உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். பல நேரங்களில் நான் என்ற ஆணவத்தால் உனக்கு இதயப்பூர்வமாக செவிமடுக்காமல் உன்னோடு மனம் திறந்து உரையாடாமல் உன்னை உதாசீனப்படுத்தி உன் மனதை புண்படுத்தி உன் அன்பை சந்தேகித்து உன்னை வெறுத்து ஒதுக்கி உன்னை கண் கலங்க வைத்த நேரங்களுக்காக உன்னிடம் மன்னிப்பு கேட்கிறேன் என்னை மனதார மன்னித்து விடு. இனிமேல் உன்னை மனம் நோகச் செய்யமாட்டேன் என்று இறைவனின் முன்னிலையில் உறுதியளிக்கிறேன்.

**மனைவி மன்னிப்பு**

திருமண வாழ்வில் கடவுள் எனக்கு துணையாக தந்த உங்களை இந்நாள்வரை ஏற்றுக் கொள்ளாமல் புரிந்து கொள்ளாமல் மதித்து அன்பு செய்யாமல் இருந்தமைக்கு உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன். பல நேரங்களில் நான் என்ற ஆணவத்தால் உங்களுக்கு இதயப்பூர்வமாக செவிமடுக்காமல் உங்களோடு மனம் திறந்து உரையாடாமல் உங்களை உதாசீனப்படுத்தி உங்கள் மனதை புண்படுத்தி உன் அன்பை சந்தேகித்து உங்களை வெறுத்து ஒதுக்கி உங்களை கண் கலங்க வைத்த நேரங்களுக்காக உன்னிடம் மன்னிப்பு கேட்கிறேன் என்னை மனதார மன்னித்து விடுங்கள். இனிமேல் உங்களை மனம் நோகச் செய்யமாட்டேன் என்று இறைவனின் முன்னிலையில் உறுதியளிக்கிறேன்.

## உடன் படிக்கையை **புதுபித்தல்**

**கணவன்:**

-------- உன்னை எனக்கு துணையாக தந்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உனக்கு பிரமாணிக்கமாய் இருந்து என் வாழ்நாளெல்லாம் உன்னை அன்பு செய்யவும் மதிக்கவும் உறுதியளிக்கிறேன்.

**மனைவி:**

-------- உங்களை எனக்கு துணையாக தந்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உங்களுக்கு பிரமாணிக்கமாய் இருந்து என் வாழ்நாளெல்லாம் உங்களை அன்பு செய்யவும் மதிக்கவும் உறுதியளிக்கிறேன்.

**மன்றாட்டு**

**நம் பதில் : பிரார்த்தனை பூக்களை படைக்கின்றோம்**

**உம் அருள் வெள்ளம் பொழிந்திடு இறைவா**

**அல்லது**

**ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.**

1.மணம் கமழும் மல்லிகைப் பூ தனது மணத்தால் பல நல் உள்ளங்களை தன்பால் ஈர்க்கும் தன்மையையும், தூய்மைக்கு அடையாளமுமாய் சிறந்து விளங்குகிறது. கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாட்டினை முழுமையாக ஏற்று, இறைபணியை தூய உள்ளத்தோடு பாங்குடனே இப்பாரினில் ஆற்றி வரும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்கள் வார்த்தையாலும், வாழ்வாலும் மக்களைக் கவர்ந்து இறை அன்பிலும், பிறர் அன்பிலும் வாழும் வழிதனை காட்டிட வேண்டுமென்று இறைவா உம் அருள் இறைஞ்சுகின்றோம்.

**2.** மணம் தரும் ரோஜா மலர் தனது நிறத்தால், மணத்தால் பிறர் வாழ்வில் சுவை சேர்ப்பதோடு தியாகம் என்னும் புண்ணியத்திற்கே அழகு சேர்க்கிறது. அம்மலரைப்போல் நம் இல்லத்தை, இல்லப் பணிகளை பாங்குடன் செய்து வரும் நம் இல்லத்தலைவிக்காகவும், மற்ற அனைத்து பணிகளையும் செய்துவரும் இல்லதலைவர்களுக்காகவும் நாம் இறைவனுக்கு நன்றி கூறுவோம். படைத்த பரமனின் பாதையில் செவ்வனே பயணிக்கவும், இன்றுபோல் என்றும் தியாக உள்ளத்தோடும், தாராள மனத்தோடும் இறைவனின் அன்பை இவ்வையகத்தில் பறைசாற்றி வாழ வரமருள வேண்டி உம் அருள் இறைஞ்சுகின்றோம்.

3. கண்ணிற்கு குளிர்ச்சியும், பார்வைக்கு அழகும் சேர்க்கும் இத்தாமரை மலரானது தனது பிரசன்னத்தால் எல்லோரையும் கவரக்கூடியது. இம்மலரைப்போல் சமுதாயம் முன்னேற, குடும்ப வாழ்வு இன்புற பல நற்பணிகளை செய்யும் இளைய சமுதாயத்தை வாழ்த்துவோம். அவர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் இறை ஒளியோடு இணைந்து தங்களது ஆக்கப்பூர்வமான பணிகளால் சமுதாயம் முன்னேற உழைக்க, நல்லதொரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்க இறை அன்பிலும் பிறர் அன்பிலும் வாழும் வழிதனை கண்டிட வேண்டுமென்று இறைவா உம் அருள் இறைஞ்சுகின்றோம்.

4. மணமும் நிறமும் ஒருங்கே இணைந்து பிறரை மகிழ்விக்கும் முல்லைப் பூவானது உள்ளத்திற்கும் , இல்லத்திற்கும் அழகு சேர்க்கும் ஒன்றாக அமைகின்றது. இம்மலரின் குணங்களைக் கொண்ட மலரும் மண உறவு உறுப்பினர்கள் அனைவருக்காகவும் இறைவனுக்கு நம் நன்றிதனை கூறுவோம். இவர்கள் வாழ்வில் வளமும், நலமும் பெற்றிடவும் இறை அன்பிலும் பிறர் அன்பிலும் வாழும் வழிதனை கண்டிடவும் வேண்டுமென்று இறைவா உம் அருள் இறைஞ்சுகின்றோம்.

**5**

புனிதத்தை துறந்து, மனிதத்தை ஏற்று நம்மை நிறைவாக்க தன்னையே வெறுமையாக்கி நமக்கு உருக்கொடுக்க தன்னை உடைத்து, உருவிழந்து வாழ்வை பலியாக்கிய இறைபதம் நம்மையும் , இன்று நமக்காக திருப்பலி நிறைவேற்றி, இறைவனின் சிறப்பு ஆசிரை பெற்றுத்தர வந்திருக்கும் அருட்தந்தையையும் இறைபதம் அர்ப்பணிப்போம். நாம் அனைவரும் அன்றாட வாழ்வில் இறைவனின் அன்பை பகிர்ந்து வாழ, பாசத்தில் பிணைந்து வாழ, வரும் நாட்களில் இறைவனின் உடனிருப்பை நிறைவாக உணர்ந்திட, இறை அன்பிலும் பிறர் அன்பிலும் வாழும் வழிதனை கண்டிட வேண்டி இறைவா உம் அருள் இறைஞ்சுகின்றோம்.

**வசந்தத்தின் வாசலில்** தனிமனிதராய் இருப்பதைவிட இருவராய் இருப்பது மேல். ஏனெனில் அவர்கள் சேர்ந்து உழைப்பதால் அவர்களுக்கு மிகுந்த பயன் கிடைக்கும். ஒருவர் விழுந்தால் அடுத்தவர் அவரை தூக்கி விடுவார். (சபை உரையாளர் 4 : 9-10)

